இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 86 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 19 – வியாழக்கிழமை 05 நவம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 86 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 19 - Thursday 05 November 2026 - Dak 10 Pages ₹ 5.00





கோவையில் 'திராவிட மாடல்' ஆட்சியில் கட்டப்பட்ட 'பெரியார் அறிவுலகம்' நூலகத்தை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். அதுபோது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, மு.பெ.சாமிநாதன், வி.செந்தில் பாலாஜி, திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் கழக மாவட்டச் செயலாளர்கள் உடனிருந்தனர்.

'பெரியார் அறிவுலக'த்தைப் பயன்படுத்தி

இளைஞர்கள் - மாணவர்கள் தங்களது அறிவுத்திறனை வளர்த்திட வேண்டும்!

நூலகத்தை பார்வையிட்ட பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!



கோவையில் 'பெரியார் அறிவுல'கத்தைப் பார்வையிட்ட பின் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது எடுத்த படம்.

கோவை, நவ. 5 -

கோவையில் 'திராவிட மாடல்' ஆட்சியில் கட்டப்பட்ட 'பெரியார் அறிவுலக'த்தை பார்வையிட்ட கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், "மாணவர்கள் - இளைஞர்கள் 'பெரியார் அறிவுலக'த்தைப் பயன்படுத்தி தங்களது அறிவுத்திறனை வளர்த்திட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

கோவையில் நேற்று (4.11.2026), திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழா" நிகழ்வில் பங்கெடுப் பதற்காகச் சென்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்டக் கழகத்தின் சார்பில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கழகத் தலைவர் அவர்கள் கோவை மாவட்டக் கழகப் புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா அவர்களுடன் பெரியார் அறிவுல கத்தைப் பார்வையிட்ட பின் கழகத் தலைவர் அவர்கள் செய்தி யாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு : -

கேள்வி: *உங்கள் கனவுத் திட்டம் எப்படி வந்திருக் கிறது?*

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்: திராவிட மாடல் அரசின் கனவுத் திட்டமான தந்தை பெரியார் பெயரில் அமைந்திருக்கும் இந்த அறிவுலகத்தை, ஏற்கனவே நான் பார்த்திருந்தாலும், அது முழுமையடைந்து திறந்து வைக் கப்பட்டதற்குப் பிறகு, இன்று நம்முடைய அய்யா ஆசிரியர் அவர்களோடு பார்க்கும் ஒரு அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அதிகம் கூட்டம் இருந்த காரணத் தால், நாங்கள் பொறுமையாக அனைத்தையும் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை. அதனால், இன்னொரு முறை நிச்சயமாக இதை முழுமை யாக பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னுடைய உள்ளத்தில் தோன்றியிருக்கிறது.

எனவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இன்றைக்கு தமிழ்நாடு போய்க் கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில், திராவிட இயக்கம் என்றால் என்ன? திராவிடம் என்றால் என்ன? தந்தை பெரியாரின் உணர்வுகள் என்ன? அவருடைய லட்சியங்கள் என்ன? என்பதை அறிந்து கொள்ள, இளை ஞர்கள், மாணவர்கள் இதை நல்ல வகையில் வந்து பார்த்து, உங்களு டைய அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற என்னு டைய அன்பான வேண்டுகோளை, இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

'டம்மி' முதல்வரின் த.வெ.க. ஆட்சியில்

மின் கொள்முதலில் மிகப்பெரிய ஊழல்!

ஆணையம் அமைத்து விசாரிக்க கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 5 -


"'டம்மி' முதல்வரின் த.வெ.க. ஆட்சியில் மின் கொள்முதலில் மிகப் பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது. எனவே இதுகுறித்து வெளிப்படைத் தன்மை கொண்ட ஆணையம் விசாரிக்க வேண்டும்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேரள அரசை மேற்கோள் காட்டி வலியுறுத்தியுள்ளார்.

கேரளம் மின் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் வேளையில், கே.எஸ்.இ.பி. தலைவராக இருந்த எம்.ஜி.ராஜமாணிக்கம் திடீரென நீக்கப்பட்டது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. சர்ச்சைக்குரிய மின் கொள்முதல் கொள்கைக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்ததே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

டெண்டர் கோராமல், GNA என்ற தனியார் இடைத்தரகர் நிறுவனம் மூலம் 500 மெகாவாட் மின்சாரத்தை 24 மணி நேரமும் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு உயர்மட்டத்தில் இருந்து ராஜ மாணிக்கத்திற்கு அழுத்தம் தரப்பட்ட தாகவும் தகவல்கள் வெளியாகின.

இதுகுறித்து நேற்று (4.11.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு :-

"கேரளத்தைப் பற்றிய இந்தச் செய்தியில் நமக்கொரு பாடம் இருக்கிறது.



Power purchase tiff led to Rajamanickam's ouster?

MANOJ VISWANATHAN (Kochi)

THE abrupt removal of M G Rajamanickam as KSEB chairman at a time when Keralam is grappling with power crisis has raised questions whether differences over a controversial power purchase proposal played a role in the decision.

While sources in the UDF attribute his removal to the decision to purchase power from Himachal Pradesh at a steep rate of ₹14.50 per unit without prior government approval, a note accessed by *TNIE* suggests that the differences may have centred on a competing proposal to procure power from a private generator without tender.

The note, which had been under consideration by the government and KSEB, makes a case for continuing the Himachal Pradesh arrangement rather than entering into a round the-clock power purchase agreement with the private supplier.

In September, amid mounting protests over unscheduled power cuts, sources said Rajamanickam had negotiated an arrangement with the Himachal Pradesh State Electricity Board (HPSEB) to procure electricity at ₹14.50 per unit during peak hours. Keralam began receiving power under the arrangement on October 1, helping it tide over the shortage.

COST ESTIMATE

Month	HP power (MU)	Cost (₹12.50/unit)	GNA RTC power (MU)	Cost (₹8.645/unit)
Nov '26	264.7	₹330.88 cr	360	₹311.22 cr
Dec '26	185.3	₹231.63 cr	372	₹321.59 cr
Jan '27	141.2	₹176.50 cr	372	₹321.59 cr
Feb '27	119.8	₹149.75 cr	336	₹290.47 cr
Mar '27	173.1	₹216.38 cr	372	₹321.59 cr
Total	884.3	₹1,105.14 cr	1,812	₹1,566 cr

At ₹14.50/unit, total cost of HPSEB power for the given months would come to ₹1,281.95 cr

GNA: General Network Access

RTC: Round the clock

MU: Mn units

Subsequent negotiations reportedly brought the rate down to ₹12.50 per unit.

Meanwhile, a private power generator approached the government with an offer to supply 500 MW round the clock at ₹8.645 per unit through General Network Access (GNA), a framework facilitating inter-state power transmission.

Sources said this led to differences over the most economical and practical option for meeting the state's electricity requirements.

Rajamanickam is learnt to have opposed replacing the Himachal Pradesh arrangement with the GNA proposal, arguing that the two offers could not be compared merely on the basis of the per-unit tariff.

KSEB sources said Rajamanickam submitted a detailed note to the government explaining why purchasing electricity at a higher tariff during peak hours would be more economical than procuring comparatively cheaper power throughout the day. More on P4

த.வெ.க. ஆட்சியில் ஒரு யூனிட் மின்சாரத்தை 35 ரூபாய், 37 ரூபாய், 41.50 ரூபாய் கொடுத்து வாங்குவது பற்றி மின்துறை அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் இதே காலத்தில் கேரள அரசு ஒரு யூனிட்டை 14.50, 12.50 ரூபாய்க்கு வாங்கியிருப்பதே அதிக விலை என சர்ச்சையாகி யுள்ளது.

அதைவிடவும் முக்கியமானது, ஒரு தனியார் நிறுவனம் தினமும் 500 மெகாவாட் மின்சாரத்தை ஒரு யூனிட் 8.645 ரூபாய்க்கு வழங்குவதற்கு கேரள அரசை அணுகியும், அதைப் புறக்கணித்த சர்ச்சையில் கேரள மின்வாரியத் தலைவர் அப்பொறுப்பிலிருந்தே நீக்கப்பட்டுள்ளார்.

கேரளாவுக்கு கிடைக்கும்போது த.வெ.க. அரசுக்கு சாத்தியமில்லாமல் போனது எப்படி?

நமக்கென்ன கேள்வியென் றால், 8.645 / 12.50 / 14.50 ரூபாய்களில் கேரளாவுக்கு மின்சாரம் கிடைக்குமென்றால் த.வெ.க. அரசுக்கு ஏன் அது சாத்தியமில்லாமல் போனது?

இதில் எவ்வளவு பெரிய ஊழல் நடந்துள்ளது, யார் யார் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என விசாரிக்க வேண்டும்.

மின்துறை அமைச்சரின் கட்டுப் பாட்டில்தான் DVAC அமைப்பும் இருப்பதால் அவர்கள் இதை விசாரித்தால் உண்மை வெளி வராது. சுதந்திரமான, வெளிப் படைத்தன்மை கொண்ட ஆணை யம் விசாரிக்க வேண்டும்.

நமக்கென்ன கேள்வியென் றால், 8.645 / 12.50 / 14.50 ரூபாய்களில் கேரளா வுக்கு மின்சாரம் கிடைக்கு மென்றால் த.வெ.க. அரசுக்கு ஏன் அது சாத்தியமில்லாமல் போனது?

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.